ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2356 - 2023 ඔක්තෝබර් මස 27 වැනි සිකුරාදා - 2023.10.27

*2356 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2334* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2341* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2023*, நவெம்பர் மாதம் *17* ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் *2023*, நவெம்பர் மாதம் *03* ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2331-B 82508-5,441 (2023/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 09.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கோட்டை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | தேசிய வைத்தியசாலை (i) பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | ரத்மலானை | ரத்மலானை, கல்கிஸ்சை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

*10-330*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க்

குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | திரகன்தஹுய மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் வேஉடவில்லி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல். |

10-413

---

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

**சமூக சேவைகள் திணைக்களம்**

வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)

விடுதிக் காப்பாளர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்கள் பதவிகள் 02 மற்றும் விடுதிக் காப்பாளர் பதவி 01 தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களினை, "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 வது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2023.11.30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)/விடுதிக் காப்பாளர் (தரம் III) தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணைத்தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விவரங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :-

1. **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (ஆடை தைக்கும் கலை, தகவல் தொழில்நுட்பம்)**

1.1. **வயது வரையறை :-**

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.2. **கல்வித் தகைமைகள் :-**

(அ) வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (ஆடை தைக்கும் கலை, தகவல் தொழில் நுட்பம்) பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்

(i) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடைவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

(ii) கல்விப் பொது தராதர (உயர்தர) பரீட்சையில் வேண்டிய பாடவிதானத்தில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்றிருத்தல், மூன்றாம் நிலைக் கல்வி பாடநெறியினைத் தொடர்வதற்குத் தேவையான செயற்திறன் மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

1.3. **வாழ்க்கைத் தொழில் தகைமைகள் :-**

உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ்

அல்லது

சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அல்லது ஆடைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ்

அல்லது

சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடப் பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கதை தொழில் திறன் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

1.4. **அனுபவம் :-**

தொடர்பற்றது

1.5. **உடற் தகுதிகள் :-**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.6. **பிற** :-

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் 1.1 தொடக்கம் 1.6 வரையான சகல தகைமைகளினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.7. **ஆட்சேர்ப்பு முறைமை** :-

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகூடிய மதிப்பெண் களினைப் பெற்ற திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும்வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருமடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பெற்றவர்கள் மாத்திரமே வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர். வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளினதும், வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும் மொத்தக் கூட்டுத் தொகையின் பிரகாரம் திறன் ஒழுங்கு முறையில் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பயிற்சிப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்தொகுதியினர் 03 மாதங்கள் கற்பித்தல் முறைமை தொடர்பிலான பயிற்சிப் பாடநெறியொன்றினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.7.1. *எழுத்து மூலப் பரீட்சை* :-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40% |
| கிரகித்தல் | நேரம் 02 மணித்தியாலம் | 100 | 40% |

1.8. **சம்பள அளவுத் திட்டம்** :-

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MT – 01 - 2016
சம்பள அளவு ரூபா 29,840.00 -10×300 -11 × 350 -10 × 560 - 10 × 660- ரூபா 48,890.00 ஆகும்.

1.9. **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.10. **குறிப்பு** :-

- சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

- மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் கட்டாய சேவையினையாற்றியதன் பின்னரே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்குத் தகைமையினைப் பெறுவர்.

**2. விடுதிக் காப்பாளர் (01)**

**2.1. வயது வரையறை :-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**2.2. கல்வித் தகைமைகள் :-**

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடைவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்தவகையில் ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்றிருத்தல்.

**2.3. வாழ்க்கைத் தொழில் தகைமைகள் :-**

அரசின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சிறுவர் விருத்தி தொடர்பில் அல்லது சமூகப் பணி தொடர்பில் அல்லது விடுதி முகாமை தொடர்பில் மூன்று மாதங்களுக்கும் குறையாத பாடநெறியொன்றினைத் தொடர்ந்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

**2.4. அனுபவம் :-**

தொடர்பற்றது.

**2.5. உடற் தகுதிகள் :-**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**2.6. பிற :-**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பிலான 2.1 தொடக்கம் 2.6 வரையிலான சகல தகைமை களினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**2.7. ஆட்சேர்ப்புத் திட்டம் :-**

எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு வினாத்தாள்களிலும் தேர்ச்சி பெற்று, அதிகபட்ச மதிப்பெண் களினைப் பெறும் தகைமைகளினைப் பெறும் விண்ணப்பதாரர்களினுள், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

2.7.1 எழுத்துமூலப் பரீட்சை :-

I. உளச்சார்புப் பரீட்சை - நேரம் 01 மணி, மொத்தப் புள்ளிகள் 100, தேர்ச்சிப் புள்ளிகள் 40%
II. மொழித்திறன் - நேரம் 01 மணி. மொத்தப் புள்ளிகள் 100, தேர்ச்சிப் புள்ளிகள் 40%

**2.8. சம்பள அளவுத் திட்டம்:-**

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MN 01 -2016
சம்பள அளவு ரூபா 27,140.00- 10×300-11×350-10×495-10×660-45,540.00 ஆகும்.

2.9. **சேவை நிபந்தனைகள் :**

இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம் ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.10. **குறிப்பு**

- சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்துமூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

- மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாக கடமையாற்றியதன் பின்னரே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்கு தகைமையினைப் பெறுவர்.

அனோஜா ஹேரத்,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 வது மாடி, கட்டம் II,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல,
2023, ஒற்றோபர் 16.

............................................................. **பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

மொழி [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :..................................................................................................................................
02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :.........................................................................................................
03. முகவரி : ...............................................................................................................................................................
04. தொலைபேசி இலக்கம் :...........................................................................................................................................
05. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................................................................
06. பிறந்த திகதி :.......................................................................................................
07. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று வயது : வருடங்கள் :........ மாதங்கள் : ........... நாட்கள் :.....................
08. திருமணமானவர்/திருமணமாகாதவர் :..........................................................................................................
09. ஆண்/பெண் பால்நிலை :........................................................................................................
10. கல்வித் தகைமைகள்:

I. க.பொ.த. (சாதாரண தரம்) :

ஆண்டு :..................... பரீட்சைச் சுட்டெண் :.....................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |

II க.பொ.த. (உயர்தரம்)

ஆண்டு :.................... பரீட்சைச் சுட்டெண்:.....................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. வாழ்க்கைத் தொழில் மற்றும் பிற தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலப்பகுதி |
|---|---|---|
| | | |
| | | |

12. அனுபவம் :-

..........................................................................................................................................................................................
..........................................................................................................................................................................................
..........................................................................................

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

10-431

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கணக்காய்வு பரிசோதகர் சேவையில் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023

கணக்காய்வு பரிசோதகர் சேவையில் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கு தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்காக இந்த சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள 40 வயதுக்கு மேற்படாத விண்ணப்பதாரர்கட்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து இதனூடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சைத் திகதி** - பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2024, தை மாதம் கொழும்பில் பரீட்சை நடாத்தப்படும். இந்தப் பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

1. நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படும். குறித்த சில எண்ணிக்கையான வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாது விடுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரமுள்ளது.

2. சேவை நிபந்தனைகள் -

(i) அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலக்கம் 380/61 மற்றும் 1985, திசெம்பர் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவை மீதான சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அந்த சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது திருத்தங்களிற்கும் மற்றும் அமப/23/0386/605/012-1 மற்றும் 2023, மாச்சு 08 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல்" தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தில் உள்ளடங்கும் நிபந்தனைகளிற்கும் கீழ் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். பொது நிர்வாக சுற்றறிக்கை ஆம் இலக்கம் 21/2017 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிச்சயிக்கப்படுகின்ற விதத்தில் உங்களால் அதற்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டு இந்த சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) பதவிக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தல், பின்வரும் விடயங்களில் தங்கியுள்ளது.

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல்.
(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியின் பதவிகளில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடைமுறை விதிகளின் பிரகாரம் அவர் முன்னைய பதவிக்கு மீண்டும் அனுப்ப அல்லது சேவை முடிவிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) 2020, ஒற்றோபர் 16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் அரசகரும மொழியில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(vii) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையிற்கும் அரசாங்க நிதிப் பிரமாணங்களிற்கும் அரசாங்கத்தினால் காலத்திக்குக் காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் அத்துடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளிற்கும் இப்பதவி உட்படும்.

03. **சம்பள அளவுத் திட்டம்.**- கணக்காய்வு பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு உரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் காட்டப்படும் சம்பள குறியீட்டு இலக்கத்தின் நேரொத்ததாக தேசிய சம்பள ஆணைக்குழுவினால் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு பதவி ஆளணியினருக்கு மாற்றீடு செய்யப்பட்ட குறியீட்டு இலக்கம் AS-01 பிரகாரம் மாதாந்தம் ரூபா 36,585.00 - 10 x 660 - 11 x 755 - 15 x930 - ரூபா 65,440.00 ஆகும்.

04. **சுகாதாரமும் ஒழுக்கமும்.**- பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்க பண்பும் உடையவரென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருப்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்தி நல்ல தேகாரோக்கியத்தினையும் சிறந்த கண் பார்வையினையும் கொண்டிருக்க வேண்டியதுடன் தீவின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கான உடலியல் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. **தகைமைகள்.**-

எல்லா பரீட்சார்த்திகளும்

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. 2023, கார்த்திகை 24 ஆந் திகதியன்று, அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் உத்தியோர்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கும் விண்ணப்பிக்க முடியுமாவதுடன், விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு அவ்வுத்தியோகத்தர்களின் வயது 22 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2001.11.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.11.24 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியினைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

III. சிறந்த ஒழுக்கப் பண்பும் நல்ல உடலாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

IV. பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது இதற்கு ஒப்பான தகைமையை பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தராதரப்பத்திர "லைசன்சியேட்" அல்லது இடைமட்ட "இன்டமீடியட்" பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(இ) இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் உயர் தேசிய கணக்கியல்/ வணிக டிப்ளோமாவில் சித்தி பெற்றிருத்தல்.

V. ஏதேனும் சமயப் பிரிவொன்றில் துறவியான எவரும் இப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு** : இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றிதழ்களையும் ஏனைய ஆவணங்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கோரப்படுகையில் சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பரீட்சையொன்றின் பெறுபேற்றை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு** - பரீட்சார்த்தி ஒருவர் தகைமை கொண்டவர் எனக் கருதப்படுவது அவரால்,-

(அ) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான, தகைமையாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை அல்லது பரீட்சை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியளவில் சகல விதத்திலும் வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருத்தல்; அத்துடன்

(ஆ) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவணமொன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

06. **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் ( Any Bank Credit Cards)

II. இணையக் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டைகள் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon )

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Any Branch of Bank of Ceylon)

**குறிப்பு**.–

(அ) மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான மொத்த தொகையையும் செலுத்த வேண்டியதுடன்

பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச்செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

07. **விண்ணப்பிக்கும் முறை** .-

(அ) விண்ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Application – Recruitment Exam ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி முற்பகல் 9.00 இற்கு திறக்கப்படும்.

(ஆ) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instruction) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துகையில் இவ் அறிவுறுத்தல்களைக் கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2023 கார்த்திகை மாதம் 24 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடையும்.

(ஈ) பரீட்சை விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களின் சரியான தன்மை தொடர்பான பொறுப்பு விண்ணப்பதாரருடையது. எல்லா வகையிலும் முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) கணனியை அனுகுவதற்காக பயன்படுத்தப்படும் மொபைல் தொலைபேசி இலக்கத்திற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டதாக குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சை திணைக்களம் அதனைத் தெரிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும். அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டால், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளபடி பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்க வேண்டும். உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள எண் மற்றும் பரீட்சையின் பெயரைச் சரியாகக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்க வேண்டும். நீங்கள் கொழும்பிற்கு வெளியே உள்ள ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரராக இருந்தால், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு உங்கள் தொலைநகல் இலக்கமொன்று மற்றும் மேற்படி விவரங்களைக் குறிப்பிடும் கோரிக்கைக் கடிதத்தையும் தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

08. **பரீட்சைக்கு அனுமதி**.-

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தோருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சாத்தியொருவர் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டியதுடன், அவ்வாறு தோற்றுகின்ற முதலாம் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையினை மண்டபத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ii) சகல பரீட்சார்த்திகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(iii) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் கூடாது.

(iv) பரீட்சைகள் நடாத்தப்படுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர்.

இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவர்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றை வகிப்பதற்கு அல்லது இந்த அறிவித்தலின் மூலம் கோரியுள்ள அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக கருதப்படுதல் கூடாது

09. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்** :- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஆவணமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தி ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆள் அடையாளத்தை உறுதி செய்ய நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உட்செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்காண இயலுமானவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது இருக்க வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்.-**

பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கும் பின்னரேனும் எந்த சந்தர்ப்பத்திலும், அவருடைய பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. தேவையான சந்தர்ப்பத்தில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறை .-**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரமே.

(இ) பரீட்சார்த்தி ஒருவர் அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்டு சித்தியடைந்திருப்பின், அவர் அப்பரீட்சையின் போது அவர் சித்தியடைந்த பெரும்பான்மையான பாடங்களில் எம் மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடங்களை ஒரு மொழியிலும், துணைப்பாடங்களை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** :

(i) மேலே 12 இல் (ஆ) மற்றும் (இ) யில் "தகைமை பெற்ற" பரீட்சை என்ற சொற்றொடர் மேலே 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

13. **பரிசோதிக்கும் முறை** :

(அ) பின்வரும் ஐந்து பாடங்களுக்காக நடாத்தப்படும் ஐந்து எழுத்துமூல பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும்:-

கணக்கியல், கிரயக் கணக்கியல், கணக்காய்வு, வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியல், சுற்றாடல்.

| | விடயம் | | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | கணக்கியல் | - | 03 | 150 |
| 2. | கிரயக் கணக்கியல் | - | 02 | 100 |
| 3. | கணக்காய்வு | - | 03 | 150 |
| 4. | வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் | - | 02 | 100 |
| 5. | சுற்றாடல் | | | |
| | 1 ஆம் பகுதி - பொருளியல் | | 01 | 50 |
| | 2 ஆம் பகுதி - பொது வர்த்தக அறிவு | | 01 | 50 |
| | 3 ஆம் பகுதி - சட்டம் | | 01 | 50 |

சுற்றாடல் வினாப்பத்திரம், மூன்று பகுதிகளுடன் கூடியதுடன் வெவ்வேறாக நடாத்தப்படும்.

எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) எழுத்துமூலப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40 சதவீத புள்ளிகளையும் மொத்த பரீட்சைக்குமாக குறைந்தபட்சம் 50 சதவீத சராசரியையும் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க தகைமை பெறுவதோடு, எழுத்துமூலப் பரீட்சையின் பின்னர் அறிவிக்கப்படும் திகதியொன்றில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவது விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமையை பரீட்சிக்க மற்றும் சேவை அறிக்கைகளை பரீட்சிப்பதற்காக ஆவதுடன், நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சை சபை நியமிக்கப்படுவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஆகும்.

(இ) பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரரினால் தமது தனிப்பட்ட கோவைக்கு உட்படுத்துவதற்காக குறித்த அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கும் போது நிறுவனத் தலைவரினால் உறுதிசெய்த விண்ணப்பத்தின் பிரதியொன்றை மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை சமர்பிக்க வேண்டும்.

14. **நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் நடைமுறை**: எழுத்துமூல பரீட்சையில் 07 வினாத்தாள்களுக்காகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் எடுக்கப்படும்.

15. 13 (ஆ) பந்தியின் பிரகாரம் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்றுப் பட்டோலை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபாலின் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

16. மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவே இறுதி முடிவாகும்.

17. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுக்கிடையே எவையேனும் இணக்க மின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

ஆர். ஆர். எம். அபேசிங்க பண்டா,
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி, (நிர்வாகம்),
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை,
2023, கார்த்திகை 20.

**பின்னிணைப்பு 'அ'**

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்**

(i) **கணக்கியல்** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 03 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்)

* கணக்கியல் கோட்பாடு. - அடிப்படை எடுகோள்கள் மற்றும் தத்துவங்கள். சொத்து மதிப்பீட்டு முறைமைகள், இரட்டைப் பதிவுக் கோட்பாடு, கிரயத்தின் வகைகள், ஐந்தொகையின் தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்குகள் என்பன தொடர்பான பொதுவான அறிவு.

* கணக்கியல் நடைமுறை.- ஒரு கணக்கீட்டு உரிமத்தில் பயன்படுத்தப்படும் வளங்களில் மாற்றங்களைக் கட்டுப்படுத்து வதற்குத் தேவையான அடிப்படையிலமைந்த கட்டுப்பாட்டு எண்ணக்கரு தொடர்பான அறிவு, நியமங்களுடன் ஒப்பிடுவதற்கான தேவைப்பாடு, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பகுப்பாய்வு, கொள்வனவு, வியாபாரம், பணத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு, முதலிய அடிப்படை முகாமைத்துவ செயற்பாடுகளிற்குரிய நடைமுறைகள் மீதான நிபுணத்துவம், நாளேடுகள், பேரேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியவற்றின் அறிக்கையிடல் வடிவமைப்புக்கள் தொடர்பான நிபுணத்துவம்.

* ஐந்தொகை தயாரித்தல், உற்பத்தி, வியாபார இலாப நட்டக் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள், புள்ளிவிபர மற்றும் கணக்கீட்டு விகிதங்கள் என்பவற்றைத் தயாரிப்பது உட்பட கணக்கியல் நடைமுறைச் சிக்கல்கள்.

(ii) **கிரயக் கணக்கியல்** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 02 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்):

* கிரயவியல்தத்துவங்கள், கிரயவியல் வகைகள், கொள்வனவு மற்றும் களஞ்சிய நடைமுறை, பொருட்கள், பொருட்களை விலையிடல், பொருள்வழங்கலின் விலை குறித்தல், கூலிகள், மேந்தலைகள், நிலையான மற்றும் மாறும் செலவுகள், நேர் மற்றும் நேரில் செலவுகள், பாதீட்டுக் கட்டுப்பாடு, நியமக் கிரயவியல், முரண்கள், எல்லைக் கிரயவியல், ஒப்பந்தக் கிரயவியல் செயல்முறை கிரயவியல், துண்டு வேலைக் கிரயவியல், போக்குவரத்துக் கிரயவியல், உற்பத்திக் கிரயவியல் என்பவற்றின் கொள்கைகள்.

(iii) **கணக்காய்வு** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 03 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்):-

* கணக்காய்வு எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் - கணக்காய்விற்கான தேவைப்பாடு, கணக்களிதகைமை கணக்காய்விற்கான அடிப்படையொன்றாக கணக்காய்வு நோக்கெல்லை, கணக்காய்வு வகைகள், கணக்காய்வுக் காலம், கணக்காய்வாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள், கணக்காய்விற்கான அதிகாரம், முன்கணக்காய்வு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கட்டுப்பாடு, ஆழமான கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, நியமங்களிற்கான தேவைப்பாடு, கணக்காய்வுச் சான்றுகளின் வகைகள், கணக்காய்வு தொழில்நுட்ப முறைகள்

* கணக்காய்வு முறைமைகளும் நடைமுறையும் - பிரதான ஐந்தொகை, உற்பத்தி, வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு விடயங்கள், காணி, கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள், பொருட்பதிவேடு, நிதிசார் சொத்துக்கள், விற்பனைகள், கொள்வனவுகள், பெறுகைகள், கொடுப்பனவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான நிபுணத்துவம்.

* கணக்காய்வுச் சிக்கல்கள் - அவதானிப்புத் திறைமையையும் மற்றும் வழுக்களையும் அசாதாரண நிலைமைகளையும் கண்டுபிடிக்கும் இயலுமையை பரீட்சிப்பதற்கான இலகுவான சிக்கல்கள்

* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிகள்

(iv) **வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும்** - வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் தொடர்பான 02 மணித்தியாலங் களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்)

**கணிதம்**

* சமன்பாடுகள் - வரைபடத் தீர்வுகள் உட்பட ஒருபடி மற்றும் இருபடிச் சமன்பாடுகள்

* தொடர்கள் - கூட்டல் விருத்தியும் பெருக்கல் விருத்தியும், கழிவிடுதல் உட்பட சாதாரண வட்டியும் கூட்டு வட்டியும்

* வரிசை மாற்ற ஒழுங்கமைவுகளும் சேர்வைகளும் உட்பட அடிப்படை நிகழ்தகவுக் கோட்பாடு, கணித மடக்கையினை பயன்படுத்தல்.

**புள்ளிவிபரவியல்**

* தரவுகளை சேகரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் பொருளுரைத்தல்
* அடுக்கு நிகழ்வுப் பகிர்வுகளின் பகுப்பாய்வு சராசரிகளும், மதிப்புச்சிதறலும், நியம வேறுபாடு, அடுக்கு நிகழ்வு வளைகோடுகள்.
* நிகழ்தகவு, பகிர்வு மற்றும் அதன் பிரயோகமும்
* மாதிரித் தெரிவும், மாதிரிப் பகிர்வீடுகளின் முக்கிய கோட்பாடுகள், நியம வழுக்கள், மாதிரித் தெரிவுமுறைகள், முக்கியத்துவத்தை அறிவதற்கான பரீட்சைகள்.
* காலத் தொடர்கள் - காலத்தொடரொன்றின் உறுப்புக்கள், போக்குகள், பருவ, சுழல் வட்ட மற்றும் ஒழுங்கற்ற முறைகள்
* குறிவரைத் தொடர்புகள், புள்ளி விபரக் குறிவரைவு குறிப்புக்கள்

(V) **சுற்றாடல்** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று பகுதிகளுடனான 03 மணித்தியால ஒரு வினாத்தாள் (ஒரு பகுதிக்கு 50 புள்ளிகள் வீதம்)

பொருளியல் கோட்பாடுகள், சட்டம் மற்றும் பொது வர்த்தக அறிவு

**பொருளியல்:**

* பொருளியல் கற்கையின் தன்மை மற்றும் முக்கியத்துவம், விலைப்பொறிமுறை, கேள்வியும் நிரம்பலும், கிரயமும் வருவாயும், இலாபத்தை உச்சப்படுத்தல், உற்பத்திக் காரணிகள், போட்டியும் தனியுரிமையும்
* இலங்கைப் பொருளாதாரத்தின் குணாம்சங்கள், தேசிய வருமானம், மொத்த தேசிய உற்பத்தி, சென்மதி நிலுவை, பணவீக்கம், பொருளாதார மந்தம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீதங்கள், மதிப்பிறக்கம் போன்ற பொருளியல் பிரச்சினைகள், குறை நிதியீட்டம்.
* பணமும் வங்கியியலும் - பணத்தின் தன்மை, பணத்தின் உருவாக்கமும் செயற்பாடுகளும், பணத்தின் பெறுமதி, பொது விலை மட்டம், இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், கடன் மற்றும் சேமிப்பு நிறுவனங்களின் பணிகள்

**சட்டம் :**

* இலங்கையில் உள்ள பலவித சட்டமுறைகளின் வரையறை பற்றிய வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும் அவை தொடர்புறும் விதமும், நீதிமன்றங்கள், தொழில் மன்றங்கள், கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பும் பணிகளும், இலங்கையில் நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளினதும் பிற முக்கிய சட்ட உத்தியோகத்தர்களினதும் பணிகள்.
* ஒப்பந்த இயல்புகள், இயற்கையான மற்றும் சட்ட ரீதியான நபர், முகவராண்மை அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட சித்தார்த்தம்

**பொது வர்த்தக அறிவு :**

* முறைமைகள் நடைமுறைகள் உட்பட அலுவலக அமைப்பு, கோவைப்படுத்தல் மற்றும் தொகுத்து அட்டவணைப்படுத்தலும், அலுவலக சாதனங்கள், கூட்டங்களை ஒழுங்கு செய்தல், கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள் மற்றும் அறிக்கைகள் எழுதுதல்
* நிறுவனக் கட்டமைப்பு, அமைப்பு வரைபடம், பதவியணியின் ஒவ்வொரு மட்டத்திற்கிடையுலுமான உறவு, ஒருமுகப்படுத்துதல், பன்முகப்படுத்துதல், தனிவியாபாரம், பங்குடமை, கூட்டு முயற்சிகள், கம்பனி, கூட்டுறவுஅமைப்பு, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியன உட்பட வணிக அமைப்புக்கள்
* காப்புறுதிக் கோட்பாடுகளும் வகைகளும், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
* கடல், தரை மற்றும் ஆகாய மார்க்கப் பொருட்களைக் கொண்டுசெல்லல், கப்பற் கேள்வு, தாமதக் கட்டணம்
* கைமாறத்தக்க ஆவணங்கள், கைமாறல் என்பதன் அர்த்தம், காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், புறக்குறிப்புக்கள், குறுக்குக் கோடிடல், ஏற்றுக்கொள்ளல், மதிப்பிழத்தல்
* இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களினால் நிறைவேற்றப்படும் பணிகள்
* முதலீட்டு கோட்பாடுகள், இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை
* விற்பனை ஒப்பந்தம், பொருட்களின் உரித்தினை ஒப்படைத்தல், நிபந்தனைகளும் பற்றாணைகளும், வாடகைக் கொள்வனவு, தவணைக் கட்டண அடிப்படையில் கொள்வனவு அடங்கலான பொருள் விற்பனை நடைமுறைகள், ஆவணங்கள், ஏற்றுமதி இறக்குமதி முறைகள், கொடுப்பனவு முறைகளும் நியதிகளும், சுங்க மற்றும் உற்பத்தித் தீர்வைகள் என்பன உட்பட சர்வதேச வர்த்தகம்
* தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பணிகள் உட்பட அபிவிருத்தி நிதி.

எனது இலக்கம் : DNA 2 / MA7/ 3/ 15

**தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023**

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வெற்றிடங்களின் எண்ணிக்கை - | சுவடிப் பாதுகாப்பாளர் | 14 |
| | செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | 04 |

இவ்வெற்றிட எண்ணிக்கையில் 70% ஆனோர் திறந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்க்கப்படவுள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படவுள்ள 30% சதவீதத்திற்கான அடிப்படை தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரிகள் குறித்த திணைக்களத்தில் இல்லாதிருப்பின் மாத்திரம் எஞ்சிய அளவினர் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுவார்கள்.

01. இப்பரீட்சையின் மூலம் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.11.24 ஆந் திகதியாகும். இப்பரீட்சையானது கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

02. **பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள் :**

| பதவி இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | பணிகள் |
|---|---|---|
| 01 | சுவடிக்காப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள சுவடிகள், வரைபடங்கள், படங்களைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைப்புச் செய்து பேணிச் செல்லல், மறுசீரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் இலக்குகளுக்கு ஏற்ப விஞ்ஞான ரீதியான வழிகாட்டல்கள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல், புத்தகம் கட்டுதல் தொடர்பாக பயிற்சிகளை வழங்குதல், அவசியப்படும் போது அரச நிறுவனங்கள்/தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றல், அரச ஆவணங்களின் பாதுகாப்புக்குரிய நடைமுறைப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடல். வழிபாட்டுத் தளங்களில் உள்ள ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்கேற்றல், இடர்களுக்கு உட்பட்ட ஆவணங்களின் மறுசீரமைப்பு தொடர்பான நடைமுறை பயிற்சிகளை வழங்குதல், சுவடிப்பாதுகாப்பு மேற்பார்வை உத்தியோகத்தர், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (காப்பக), தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் (தொழில்நுட்பம்), செவிப்புல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |

| பதவி இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | பணிகள் |
|---|---|---|
| 02 | செவிப்புல-கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள செவிப்புல - கட்புல ஆவணங்களை பேணிச் செல்லல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் அவற்றினை ஆய்வு செய்பவர்களுக்கும் செவிமடுப்போருக்கும் கிடைக்கச் செய்தல், அந்த ஆவணங்களின் பிரதிகளை கணினி அல்லது செவிப்புல - கட்புல ஊடகங்களின் மூலம் ஆய்வு செய்பவர்களுக்கு வழங்குதல், செவிப்புல - கட்புல உபகரணங்களின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள், கேட்போர் கூடத்தில் நடாத்தப்படும் விழாக் களுக்கு அவசியப்படும் செவிப்புல - கட்புல உபகரணங்களின் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (செவிப்புல - கட்புலம்) தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (திரைப்பட மற்றும் செவிப்புல - கட்புலம்), தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் (தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |

03. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கு 2018.06.05 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதியில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணங்களுக்கும் அவ்வொழுங்கு விதிகளுக்கும் மற்றும் சேவைப் பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதனகத்து மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவையின் மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்தி பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் சுவடிக் காப்பாளர் / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இப்பயிற்சியளிக்கும் தரத்தில் சேர்க்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தியதாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடிக்காப்பாளர் III ஆந் தரத்துக்கு /செவிப்புல - கட்புல ஆவணப்பாதுகாப்பாளர் III ஆந்தரத்துக்கும் ஆட்சேர்க்கப்படுவர்.இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் III ஆந் தரத்திக்கும்/ செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்துக்கும் ஆட்சேர்ப்பபுச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவிக்கு உரித்தான கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** : அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 (அட்டவணை V) என்ற சுற்றறிக்கைக்கு ஏற்ப, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் (பயிற்சியளிக்கும் தரம்) மற்றும் (செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்) இற்கு உரித்தான கொடுப்பனவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

முதலாம் வருடத்திற்கு மாதாந்தம் : ரூபா 27,140.00

இரண்டாம் வருடத்திற்கு மாதாந்தம் : ரூபா 27,440.00

இரண்டு வருட பயிற்சிக் காலம் திருப்திகரமாக நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தும் பயிலுநர்கள் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் தரம் III இன்/செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் தரம் III இன் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள். முன்னைய சுற்றறிக்கையின்படி அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் (MN3-2016) ரூபா 31,040.00 -10×445 - 11 × 660 - 10 × 730 - 10 ×750 - ரூபா 57,550.00 (ஆரம்ப சம்பளப் படிமுறை - ரூபா 31,040.00) ஆகும். இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்.

05. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

| பதவி | (அ) **கல்வித் தகைமைகள்** | (ஆ) **தொழில்சார் தகைமைகள்** | (இ) **அனுபவம்** |
|---|---|---|---|
| சுவடிக்காப்பாளர் (பயிற்சித் தரம்)<br>செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்) | க. பொ. த. (சா.தர) பரீட்சையின் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல் மற்றும் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியெய்தியிருத்தல்.<br>மற்றும்<br>க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மொத்தம் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் (சதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். | ஏற்புடையதற்றது | ஏற்புடையதற்றது |

(ஈ) ***உடற் தகைமைகள்*** :
எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) ***ஏனைய*** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iii) ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையற்றவராவார் ;
(iv) பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியப்படும் சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) ***வயதெல்லை*** :
விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் முப்பது (30) வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும். அதன்படி 2005.11.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1993.11.24 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது.

06. **ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சுவடிக்காப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப திறந்த ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்பயிற்சித் தரத்தில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடிக்காப்பாளர் தரம் III இற்கு /செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்படுவர். பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்வதற்குத் தவறும் பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலம் தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

(அ) எழுத்துப் பரீட்சை

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. தொழில்நுட்பம் (அவ்வந்த பதவிக்குரிய விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும்.) | 02 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

(i) பரீட்சை பெறுபேறுகள் - பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அறிவிக்கப்படும்.

07. **பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியிடம் காணப்படும் பொது நுண்ணறிவு, பகுத்தறியும் திறன், கருத்துரைப்பு, எண்ணிக்கை சார்ந்த திறன்கள் மற்றும் புரிந்துகொள்ளும் திறன் ஆகியன அளவிடுவதை இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 02. தொழில்நுட்பம் - அந்த பதவிக்குரிய தொழில்நுட்ப மற்றும் விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும் | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை அளவிடும் செயற்பாடு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

08. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். மேலும் இப்பரீட்சைக் க்கட்டணத்தை நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகம்/ மாவட்ட/ பிரதேச செயலகங்களில் பணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் வரவு வைக்கும் வகையில் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்திய விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. அவ்வாறே பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கும்.

09. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைய வேண்டும் என்பதோடு அத 81/2" × 12" என்ற அங்குல (ஏ4) அளவுடைய கடதாசியில் விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். கணினியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவம் ஒரு மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்புகள் இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) பரீட்சைக்காக நிரப்பிய விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் 2023.11.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தேசிய சுவடிகள் காப்பக பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம், இலக்கம் 07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் .................................... .......................................................... பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். 2023.11.24 ஆந் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பதவியொன்றில் வகிக்கும் உத்தியோகத்தர், அரசின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்து அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். பரீட்சை நடாத்தப்படும் என அறிவித்தல் வெளியிடப்பட்டு குறைந்தது 02 அல்லது 03 நாட்களுக்கு பின்னரும் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திர நிழற்படப் பிரதியொன்றை விரைவில் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகும். அவ்வாறு விசாரிக்கும் போது

பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

10. **பரீட்சைக்கு தோற்றுதல்** :

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவராகக் கருதப்படமாட்டார்.

(இ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை** : எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

12. **ஏனைய விடயங்கள்** :

இவ்விதிமுறைகளைக் கருத்திற் கொள்ளாத விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்,
இலக்கம் 07, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த ............................................................ பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023**

**Open Competitive Examination for Recruitment to the Post of Supervising Management Assistant Technical Services Category ............................................................Training Grade of the Department of National Archives** - 2023

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள்

| தெரிவுகள் | பதவி |
|---|---|
| 1 | |
| 2 | |

(வர்த்தமானி அறிவித்தல் 02 ஆம் பந்தி பிரகாரம் இலக்கமிடவும்)

1. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
...................................................................................................................................
...................................................................................................................................
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
...................................................................................................................................
...................................................................................................................................
(உ-ம் : H. M. S. RATHNAYAKA)

3. முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :
...................................................................................................................................
...................................................................................................................................

4. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :
...................................................................................................................................
...................................................................................................................................

(அ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................................................................................
..........................................................................................................................................

(ஆ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..........................................................................................................................................
..........................................................................................................................................

5. பெண்/ ஆண் பால் நிலை : பெண் ☐ ஆண் ☐

6. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

8. பிறந்த திகதி :
(அ) வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. விண்ணப்பிக்கும் பயிற்சித் தரம் :..................................................

10. கல்வித் தகைமைகள் :
(அ) க. பொ. த. (சா./ த.) : முதற் தடவை
பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ☐
பரீட்சை சுட்டிலக்கம் : ☐

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க. பொ. த. (சா./ த.) : இரண்டாம் தடவை :

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : ☐
பரீட்சை சுட்டிலக்கம் : ☐

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(இ) க. பொ. த. (உ./த.) :

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

12. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.) :

(i) பணம் செலுத்திய தபாலகம்/ உப தபாலகம் :.....................................................................
(ii) செலுத்திய தொகை :.....................................................................
(iii) செலுத்திய திகதி :.....................................................................
(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :.....................................................................

பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

13. விண்ணப்பதாரியின் சான்றுரை / சான்றிதழ் :

இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானதும் சரியானதும் என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடை நிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

திகதி :................. ................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..................................................... ஆகிய நான், தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் ............................... மாதம் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.
(ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்)

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் :...........................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :...........................................
பதவி :...........................................
முகவரி :...........................................
(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி :.................................

குறிப்பு : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 9 ஆம் பந்தியில் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

15. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற .............................................. திரு./திருமதி/செல்வி ............................ .................. என்பவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

.................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

நிறுவனத் தலைவரின் பெயர் :...............................................
பதவி :...............................................
சேவை நிலையத்தின் முகவரி :...............................................
திகதி :.......................

10-472

---

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

இணைப்பு 01

தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத பல்வகைப் பணித் தொகுதி 1 சேவை வகுதியைச் சேர்ந்த தொழில் நியாய சபைகளின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2023

தொழில் நியாய சபைகள் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா பல்வகைப் பணித் தொகுதி I சேவை வகுதியைச் சேர்ந்த தொழில் நியாய சபைகளின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தல் 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் 2023.06.12 ஆந் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி பின்வருமாறு நீடிப்புச் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி - 2023.11.27

08. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.-

மேலும், 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக பூர்த்தி செய்து, உரியவாறு பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து 2023.11.27 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு – 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பது கட்டாயமாகும்.

இதற்கு முன்னர் சரியான முறையில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து தபால் மூலம் அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பது அவசியமற்றது.

அத்துடன், 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை, மாதிரி விண்ணப்பப்படிவத்துடன், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இணையத்தளதில் (www.moj.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு
மறுசீரமைப்பு அமைச்சு.

2023,ஒற்றோபர் 23.

10-473/1

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

இணைப்பு 02

தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாராத பல்வகைப் பணித் தொகுதி 1 சேவை வகுதியைச் சேர்ந்த தொழில் நியாய சபைகளின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) – 2023

தொழில் நியாய சபைகள் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா பல்வகைப் பணித் தொகுதி I சேவை வகுதியைச் சேர்ந்த தொழில் நியாய சபைகளின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தல் 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் 2023.06.12 ஆந் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி பின்வருமாறு நீடிப்புச் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி – 2023.11.27

**தகைமைகள்.-**

iii. **அனுபவம்** :
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் நீதிமன்றமொன்றில் சேவையாற்றுகின்ற ஆரம்ப தரத்தைச் சேர்ந்த தேர்ச்சியற்ற, பகுதியளவில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற சேவை வகுதியைச் சேர்ந்த பின்வரும் பதவியொன்றில் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அது பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(i) கட்டளை சேவகர்/எழுத்தாணை நிறைவேற்றுநர்

(ii) கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர்

(iii) பிசுக்கால் மேற்பார்வைத் தலைவி

(iv) பிசுக்கால் பியன்

(v) நீதிமன்ற காவலர்

(vi) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு நீதிமன்றமொன்றில் அல்லது தொழில் நியாய சபையொன்றில் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள இணைந்த சேவைக்கு உரித்தான அலுவலக சிற்றூழியர்கள் மற்றும் தொழில்நியாய சபை இலிகிதர்கள்.

(vii) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியளவில் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையைக் காலத்தைக் கொண்டுள்ள நீதி அமைச்சின் தட்டெழுத்தாளர் (MN-01) பதவிகளை வகிப்பவர்கள்.

மேலும், 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக பூர்த்தி செய்து, உரியவாறு பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து 2023.11.27 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு – 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பது கட்டாயமாகும்.

இதற்கு முன்னர் சரியான முறையில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து தபால் மூலம் அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பது அவசியமற்றது.

அத்துடன், 2332 ஆம் இலக்க 2023.05.12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை, மாதிரி விண்ணப்பப்படிவத்துடன், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இணையத்தளதில் (www.moj.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு
மறுசீரமைப்பு அமைச்சு.

2023, ஒற்றோபர் 23.

10-473/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.